https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

24th SEPTEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 46



சாதிக்கத் துடிக்கும் நடனப் புயல்

08



அதுவும் இதுவும் பிழை

05



# ரணில்–மைத்திரி இணைவு: திரை மறைவில் முயற்சி

02

## செயலாளர் பதவியைக் கைப்பற்றுவதற்கு துமிந்த போட்டி



சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்படத்தைத் தொடர்ந்து அந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்கு கடும் போட்டி இடம்பெற்று வருகிறது.

02

## இவர்களுக்குத்தான் அடுத்த வலை

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டு வரும் கூட்டமைப்பு அடுத்த கட்டத்தை நோக்கிப் பாய்கிறது.

அதுதான் மொட்டு கட்சியில் யாரெல்லாம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலை ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்களோ அவர்களை வளைத்துப் போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாம் அந்தக் கூட்டமைப்பு

ஓரிரு நாட்களுக்கு

02

## அமைச்சரவை மாற்றம்: பசில் அப்செட்



வெளிநாட்டு சுற்று பயணத்தை ஆரம்பித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் சிறியதொரு அமைச்சரவை மாற்றம் ஒன்றைச் செய்யப் போகிறார்.

புதிதாக நான்கு பேருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கவுள்ளார்.இப்போதிருக்கின்ற அமைச்சர்களிடம் இருந்து பிடுங்கியே வழங்கப் போகிறார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. ஜனாதிபதி

02



புதுசுடர்
www.puthusudar.lk
2023 SEPTEMBER 24 - SUNDAY

# என்ன செய்யப் போகிறார் ஜனாதிபதி ?

சணல் 4 வெளியிட்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆவணத்தின் பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. அது தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கு சர்வதேச விசாரணையே வேண்டும் என்று நிற்கிறார்கள் பெரும்பாலானவர்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் – எதிர்க்கட்சியினர் என எல்லோரும் அதே நிலைப்பாட்டில்.அரசு மற்றும் ராஜபக்ஸ ஆதரவு தரப்பு அதை எதிர்க்கிறது.

இந்த நிலையில்,இதைக் கைவிடமும் முடியாது ராஜபக்ஸ தரப்பைத் தண்டிக்கவும் முடியாது என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

ராஜபக்ச தரப்பு என்னதான் குற்றம் செய்தாலும் அவர்களைத் தண்டிக்க முடியாத நிலையில் இருக்கிறார் ஜனாதிபதி.காரணம் அவர் ஜனாதிபதியானது அவர்களால் என்பதால்.ஜனாதிபதி பதவியின் மிகுதிக் காலத்தைக் கடப்பதற்கும் ராஜபக்ச தரப்பின் உதவி தேவை.

மறுபுறம். மக்களையும் பார்க்க வேண்டியுள்ளது.அவர் இது விடயத்தில் என்ன செய்யப் போகிறார் என்று மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதில் இருந்து தப்புவதற்காக குழுவொன்றை நியமித்துள்ளார் ரணில்.இந்தக் குழு உண்மையில் உண்மையைக் கண்டறியுமா என்ற சந்தேகம் மக்களிடம் உள்ளது.

இருந்தாலும்,இந்த விவகாரம் பலரை ஆட்டங்காணச் செய்துள்ளது என்பதை மறுக்க முடியாது.இதை எவர் மறுத்தாலும்,மக்கள் இது தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோதே பேசப்பட்டது அப்போது எதிர்க்கட்சியாக இருந்த மொட்டு தரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்காகவே இதைச் செய்தது என்று.

அதேபோல் மொட்டு ஆட்சியைப் பிடித்து கோத்தா ஜனாதிபதியானார். ஜனாதிபதியானதும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டது.விசாரணை அதிகாரிகள் இடமாற்றப்பட்டார்கள்.இது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கோத்தாவை பதவியில் இருந்து விரட்டுவதற்காக மக்கள் வீதிக்கு இறங்கியபோது அந்த மக்கள் வெளிப்படையாகக் கூறினார்கள் ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது கோத்தா தரப்புதான்.என்று. நாங்கள் ஏமாந்துபோய்-அப்பாவி முஸ்லிம்களை பகைத்துக்கொண்டு கோத்தாவுக்கு வாக்களித்துவிட்டோம் என்றார்கள்.

கோத்தா விரட்டப்பட்டபோது சொன்னார்கள் ""அப்பாவி மக்களை குண்டு வைத்து கொலை செய்த அந்த பாவம்தான் கோத்தாவை இப்படி விரட்டியுள்ளது என்று.

மொத்தத்தில் இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்று மக்கள் என்றோ அறிந்துவிட்டார்கள்.அதனால் சணல்-4வின் ஆவணம் மக்களுக்கு பெரிதாக அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை.

அதைப் பார்த்த எல்லோரும் கூறியது "இது எங்களுக்குத் தெரியும்தானே" என்றுதான்.ஆக,அந்த ஆவணம் மக்களின் நிலைப்பாட்டை பலப்படுத்துவதற்கு -அவர்களின் நிலைப்பாடு சரி என்று கூறுவதற்கு உதவியாக இருந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

மேலும்,முஸ்லிம்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை.இது அரசியலுக்காக செய்யப்பட ஒன்று என்று இந்த ஆவணம் மூலம் மக்கள் மேலும் புரிந்துகொண்டுள்ளனர்.

இதனால் இப்போது மக்களின் கவனம் முஸ்லிம் மக்களின் தரப்பில் இருந்து கோத்தா தரப்பிற்கு மாறிவிட்டது. இந்தத் தாக்குதலில் இனவேறுபாடுகள் இன்று மூவினத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்புபட்டுள்ளனர்.

அவர்கள் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இதைச் செய்யவில்லைஅவர்களின் அரசியல் தேவைக்காக இதைச் செய்துள்ளனர் என்று மக்களுக்கு விளங்கிவிட்டது.

இப்போது இருக்கின்ற அடுத்த பிரச்சினை இந்த ஆவணம் உண்மைதானா,இதில் அசாத் மௌலானா கூறுவது உண்மைதானா என்று கண்டறிவதுதான்.

அதற்கு உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.உள்நாட்டு விசாரணைமூலம் ஒருபோதும் உண்மையைக் கண்டறிய முடியாது.ஏற்கனவே நடத்தப்பட்ட விசாரணைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.விசாரணைகளில் தெரிவிக்கப்பட்ட சில தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில்,மீண்டும் உள்நாட்டு விசாரணை நடத்தினால் உண்மை வெளிவரவேமாட்டாது.

ஆகவே எல்லோரும் இப்போது கோருவது சர்வதேச விசாரணையைத்தான்.அதுதான் சரியான வழி.

இருந்தாலும் ஜனாதிபதி நியமித்துள்ள குழு எதை வெளிப்படுத்தப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## ரணில் – ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிறிலங்கா சுதந்திர கட்சியை முழுமையாக அரசுடன் இணைப்பதற்கான நடவடிக்கை திரைமறைவில் இடம்பெற்று வருவதாக அறிய முடிகிறது.

தயாசிறி ஜயசேகரவை சு.கவின் பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்கியத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அரசில் இணைந்து செயற்படுகின்ற சு.க உறுப்பினர்களே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

சு.க அரசில் இணைவதற்கு தயாசிறி முழுமையாகத் தடையாக இருந்தமையாலேயே அவர் பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று சு.க வட்டாரம் கூறுகிறது.

அரசில் இணைந்துள்ள சு.க உறுப்பினர்கள் மீண்டும் சு.கவில் இணைவதாக இருந்தால் அரசில் இருந்து விலகி வர வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தார் தயாசிறி.

அவர்களோ முழு சுகவையும் அரசுடன் இணைக்கும் முயற்சியில் இருக்கும்போது அரசை விட்டு எப்படி விலகுவர்?

மைத்திரிபால ஆரம்பத்தில் தயாசிரியின் மேற்படி நிலைப்பாட்டில்தான் இருந்தார். பின்னர் மாறிவிட்டார்.

அதற்கு காரணம் அரசுடன் உள்ள சு.க உறுப்பினர்கள் மைத்திரியை சந்தித்து மேற்கொண்ட மூளைச்சலவைதான் என்று சொல்லப்படுகிறது.

அவர்களின் அழுத்தம் காரணமாகவே தயாசிரியும் செயலாளர் பதவியில் இருந்து மைத்திரியால் நீக்கப்பாட்டார் என்று தகவல்கள் கூறுகின்றன.

## அமைச்சரவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாடு செல்வதற்கு முன்.

இந்த அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பசில் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ரணில் ஜனாதிபதியானது முதல் மொட்டு கட்சியின் 10 பேருக்கு கெபினட் அமைச்சுக்கள் வழங்குமாறு பசில் கோரி வருகிறார்.ரணில் இழுத்தடித்துக்கொண்டே வருகிறார்.

இந்த நிலையில்,ரணில் சார்ந்த 4 பேருக்கு அமைச்சுப் பதவி வழங்குவதில் பசிலுக்கு உடன்பாடில்லை.

## செயலாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதில் முன்னணியில் இருப்பவர் கட்சியின் முன்னாள் செயலாளர் துமிந்த திஸாநாயக்க.

துமிந்த செயலராக இருந்தபோதுதான் கட்சிக்குள் அவருக்கு எதிராக பிரச்சினை ஏற்பட்டு அவரிடம் இருந்து செயலாளர் பதவி பறிக்கப்பட்டு அது தயாசிரிக்கு வழங்கப்பட்டது.

இப்போது அந்தப் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்கு துமிந்த முயற்சி செய்து வருகிறார் என்று அறிய முடிகிறது.

இப்போது துமிந்த மைத்திரியோடு நெருக்கமாக இருப்பதால் ஒருவேளை இது சாத்தியப்படலாம் என்கிறது சு.க வட்டாரம்.

## இவர்களுக்குத்தான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன் இக்கூட்டமைப்பின் ஸ்தாபகர் நிமால் லான்சாவை நாடாளுமன்றில் சந்தித்து உரையாடிய மொட்டு கட்சி எம்பிக்களிடமே லான்சா இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தார்.

# 33 வருடங்களின் பின்னர் ஆலயத்தை பார்வையிட அனுமதி!



கட்டுவன் காசியம்பாள் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ் தானம் கடந்த 1990ம் ஆண்டுக்கு பின்னர் 33 வருடங்களுக்கு பின்னர் ஆலயத்தை சென்று பார்வையிடுவதற்கும் ஆலய வழிபாட்டிற்கும் ராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

கட்டுவன் காசியம்மாள் அம்மன் ஆலய தேவஸ்தானத்தினரால் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக விஜயகலா மகேஸ்வரன் எடுத்த முயற்சியின் பயனாக குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்த நிலையில் வெள்ளியன்று (22) இராணுவத்தினரின் அனுமதியுடன்உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிட்டதோடு ஆலயத்தில் பூஜை வழிபாடுகளும் குருமார்களினால் முன்னெடுக்கப்பட்டது.





# 93RD NATIONAL DAY OF KINGDOM OF SAUDI ARABIA

23RD September 2023

# இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் ஹமூத் அல்கஹ்டானி அவர்களின் செய்தி







சவூதி அரேபியாவின் 93வது தேசிய தினத்தை நாம் கொண்டாடும் இவ்வேளையில், எமது கடந்த காலத்தை கொண்டாடுவது மட்டுமல்லாமல், ஒளிமயமான எதிர்காலத்தையும், அனைத்தையும் உள்ளடக்கிய, நிலையான, புதுமைகள் நிறைந்த மற்றும் வளமான எதிர்காலத்தை சவூதி அரேபிய இராச்சியத்தின் புத்திசாதுர்யமான தலைமைத்துவத்தின் கீழ் கற்பனை செய்கிறோம்.

இன்று, சவூதி அரேபியா அதன் 93 ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. மன்னர் அப்துல் அசீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் ஸ/ஊத் அவர்கள் தொண்ணூற்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்ற ஒருநாளில்தான் சவூதி அரேபியாவை நிறுவினார்.

இந்நாளில் ஒவ்வொரு ஆண்டும், நிறுவனர் எடுத்த வீர நிலைப்பாடுகளை நாம் நினைவுகூறுகிறோம். இராச்சியத்தை ஒன்றிணைத்து, ஒருங்கிணைத்து, அதனைக் கட்டியெழுப்பினார். பின்னர் அவர் ஆரம்பித்து வைத்த பயணத்தை, தொடர்ந்து வந்த அனைத்து மன்னர்களும் தொடர்ந்தது மட்டுமல்லாது சவூதி அரேபிய இராச்சியத்தை, பிராந்திய மற்றும் உலக அளவில் உயர் பொருளாதார மற்றும் வளர்ச்சி அடைந்த நாடக மாற்றுவதில் பெரும் பங்களிப்புச் செய்தனர்.

இச்சந்தர்ப்பத்தில், இரண்டு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அசீஸ் அவர்களுக்கும், பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகம்மது பின் சல்மான் பின் அப்துல்அசீஸ் அவர்களுக்கும், சவூதி அரேபியா மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதய உயர் தலைமைகளின் கீழ் இராச்சியம் மேலும் முன்னேற்றமும் மற்றும் அபிவிருத்தியும் அடைய வாழ்த்துகின்றேன்.

சவூதி அரேபிய இராச்சியம், இரண்டு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அசீஸ் ஆல் ஸுஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரி ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மற்றும் திட்டங்களின் கீழ், சவூதி அரேபிய இராச்சியத்தின் மூலோபாயத் திட்டமான "விஷன் 2030" ஊடாக பல்வேறு துறைகளிலும், அனைத்து மட்டங்களிலும், பாரிய வளர்ச்சிகளைக் கண்டுள்ளது.

சவூதி அரேபிய இராச்சியத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நம்பிக்கையளிக்கும் எதிர்கால திட்டங்கள் மற்றும் அதன் குடிமக்களை அனைத்து மட்டங்களிலும் மேன்மை அடையச்செய்வதற்க்கான ஆழமான மிக முக்கிய திட்டங்களை இம்மூலோபாயத் திட்டம் உள்ளடக்கியுள்ளது.

உதாரணமாக: மன்னர் சல்மான் பூங்கா, நியோம், தி லைன், தி நியூ ஸ்கொயர் திட்டம், சவூதி அரேபிய பசுமை முன்னெடுப்பு , மத்திய கிழக்குபசுமை முன்னெடுப்பு, திரியா கேட் திட்டம், கிடியா திட்டம், அல் – உலா மேம்பாட்டு திட்டம், ராஃபிக் உவர் நீர் சுத்திகரிப்புத்திட்டம், அமலா திட்டம், சகாகா சூரிய சக்தி மின் உற்பத்தித்திட்டம், செங்கடல் திட்டம் மற்றும் மன்னர் சல்மான் சக்திவள நகரத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.

சவூதி அரேபியா, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவதில் ஒரு இன்றியமையாத பங்காளியாக விளங்குகிறது.

இந்த ஆண்டு, சவூதி அரேபியா இராச்சியமானது சர்வதேச பாதுகாப்பு மற்றும் உலக அளவில் அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் பல உச்சிமாநாடுகள், மாநாடுகள் மற்றும் சந்திப்புகளை அங்கு நடாத்தியது.

அவ்வாறே சவூதி அரேபியாவானது உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் மக்களின் துன்பங்கள், துயரங்களைப் போக்கும் நோக்கோடு 7.12 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளை (மனிதாபிமானம் மற்றும் அபிவிருத்தி) வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில், 2022ஆம் ஆண்டில் உலகில் நன்கொடை வழங்கும் நாடுகளில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், பூமியைப் பாதுகாப்பதற்கும், காலநிலை அபாயங்களைக் குறைப்பதற்கும் சவூதி அரேபிய இராச்சியம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

சவூதி அரேபிய பசுமை முன்னெடுப்பு, மத்திய கிழக்குபசுமை முன்னெடுப்பு, ரியாத்தை தளமாகக் கொண்ட உலகளாவிய நீர் அமைப்பை நிறுவுவதற்கான பட்டத்து இளவரசர் மற்றும் பிரதம மந்திரி அவர்களின் அறிவிப்பு மற்றும் சுத்தமான சக்தி வளத்தில் தங்கியிருத்தல் உட்பட பல முன்னெடுப்புகள் மூலம் இம்முயற்சியானது மேலும் மெருகூட்டப்பட்டது.

சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசானது நீண்ட கால மிக உன்னதமான இருதரப்பு உறவுகளை பேணி வருகிறது.

இரு நாடுகளுக்கிடையிலான இவ்வுறவுகள் பரஸ்பர ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு நாடுகளுக்கிடையில் பல ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இரு நாடுகளின் மூத்த அதிகாரிகளின் பரஸ்பர விஜயங்கள் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வளர்ப்பதில் மேலும் பங்களிப்புச் செய்துள்ளன.

வளைகுடா பிராந்தியத்தில் இலங்கையின் மிக முக்கியமான வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக சவூதி அரேபிய இராச்சியம் கருதப்படுகிறது.

2022ஆம் ஆண்டில், இலங்கைக்கான இராச்சியத்தின் ஏற்றுமதியின் மொத்த அளவு 714 மில்லியன் சவூதி ரியால்களை எட்டிய அதே வேளை, இலங்கையிலிருந்தான இராச்சியத்தின் மொத்த இறக்குமதியின் அளவு 508.863 சவூதி ரியால்களை எட்டியுள்ளது.

சவூதி அரேபிய இராச்சியம் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் மிக முக்கியமான பொருட்களில் உலோகம், பிளாஸ்டிக் பொருட்கள், தோல் பதனிடும் பொருட்கள், வண்ணப்பூச்சுகள், கடதாசி மற்றும் அலுமினியம் ஆகியவை அடங்கும்.

அதேவேளை சவூதி அரேபிய இராச்சியம், கோபி, தேயிலை, வாசனைத்திரவியங்கள், ஆடைகள், பழங்கள் மற்றும் மீன் போன்ற பொருட்களை இறக்குமதி செய்கிறது.

சவூதி–இலங்கை கூட்டுக் குழு, சவூதி அரேபியா இராச்சியத்தின் ரியாத் நகரில் இவ்வருடம் மே மாதம் அதன் முதல் சந்திப்பை நடத்தியது.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கலாசாரம், சுற்றுலா போன்ற துறைகளோடு தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்புக்களைத் தொடர்ந்து, இலங்கை வர்த்தகர்களுக்கும், சவூதி அரேபிய வர்த்தக சம்மேளனத்தின் அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்றும் ரியாத் நகரில் இடம்பெற்றது.

மேலும் விரைவில் இரு தரப்பினருக்கும் இடையே மேலும் பல சந்திப்புகள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவூதி அரேபியா இராச்சியமானது இலங்கை குடியரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு முக்கிய பங்காளியாகக் கருதப்படுகிறது.

இந்த வகையில் இலங்கையின் கல்வி, நீர்ப்பாசனம், விவசாயம் மற்றும் சாலை வலையமைப்பு திட்டங்களின் அபிவிருத்திப் பணிகளுக்காக மொத்தமாக 455 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளது.

சுமார் இரண்டு இலட்சம் இலங்கையர்கள் சவூதி அரேபியா இராச்சியத்தில் கடமை புரிவதோடு , ஆயிரக்கணக்கான இலங்கை முஸ்லிம்கள் உம்ரா மற்றும் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இராச்சியத்திற்கு வருகை தருகின்றனர்.

மேலும் பல சவூதி பிரஜைகளுக்கு இலங்கை ஒரு முக்கியமான சுற்றுலா மற்றும் முதலீட்டு தலமாக கருதப்படுகிறது.

இறுதியாக, எமது இரு நட்பு நாடுகளுக்கும் மற்றும் அதன் மக்களுக்கும் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியை நல்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



# 93RD NATIONAL DAY OF KINGDOM OF SAUDI ARABIA

23RD September 2023

# 93ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடும் சவூதி அரேபியா

காலித் ரிஸ்வான்

வருடாந்தம் செப்டம்பர் 23 ஆம் திகதி, சவூதி அரேபிய இராச்சியம் தனது தேசிய தினத்தை கொண்டாடுகிறது. 1932ஆம் ஆண்டு சவூதி அரேபிய இராச்சியத்தை அதன் மன்னர் அப்துல் அசீஸ் அல்சவுத் நிறுவியதை இந்த முக்கியமான நாள் நினைவுகூறுகிறது.

சவூதி அரேபியாவின் தேசிய தினம் ஒற்றுமை, பாரம்பரியம் மற்றும் முன்னேற்றத்தின் அடையாளத்தை பிரதிபளிக்கின்ற, சவூதி மக்களால் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்ற ஒரு முக்கியமான நிகழ்வாகும்.

இவ்வாண்டு சவூதியின் தேசிய தினம் "கனவு காண்போம், வெற்றிகொள்வோம்" என்ற வாசகத்தை மகுடமாகத் தாங்கி கொண்டாடப்படுகிறது.

இந்த வாசகமானது சவூதியின் விஷன் 2030 திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற பல பாரிய திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் சவூதி அடைந்திருக்கின்ற வெற்றிகள் மற்றும் அடைய இருக்கின்ற வெற்றிகளை பிரதிபளிக்க கூடிய வகையில் அமைந்திருக்கிறது.

93வது தேசிய தினத்தை கொண்டாடும் வகையில், தேசிய தினத்தின் அடையாள வடிவமைப்பாக ஒரு புகைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சவுதி அரேபியா மக்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நனவாகவும் யதார்த்தமாகவும் மாறிய உயர் கனவுகளை இந்த வடிவமைப்பு பிரதிபலிக்கிறது.

சவூதி விஷன் 2030 இன் கீழ் சவூதி அரசாங்கம் செயல்படுத்தி வரும் பாரிய திட்டங்களை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இவ் வடிவமைப்பு, சவூதியின் பல்வேறு நவீன திட்டங்களின் சின்னங்களால் சூழப்பட்டு நவீனத்தை நோக்கி முன்னேறும் இளைஞர்களைக் குறிக்கும் வகையில் ஒரு ஆணினதும் பெண்னினதும் உருவம் மையத்தில் வைக்கப்பட்டு இமையப் பெற்றிருக்கிறது.



சவூதி அரேபியாவின் தேசிய தினக் கொண்டாட்டங்கள் மக்கள் மத்தியிலான ஒற்றுமையை பறைசாற்றக் கூடியவையாக இருப்பதோடு சவூதி மக்கள் தங்கள் உயரந்த வரலாறு, விழுமியங்கள் மற்றும் அபிலாஷைகளை கொண்டாடுவதற்காக இந்நாளில் ஒரே நாடாக ஒன்று சேர்கின்றனர்.

மக்களின் வலிமை, தேசத்திற்கான அர்ப்பணிப்பு மற்றும் அவர்களின் தேசிய அடையாளத்தின் பெருமை ஆகியவை இந்த கொண்டாட்டங்களின் போது அவர்கள் காட்டும் ஒற்றுமையில் பிரதிபலிக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சவூதி அரேபியாவின் தேசிய தினம் நெருங்கும் போது, நாடு முழுவதும் எதிர்பார்ப்பு மற்றும் முன்னாயத்தங்கள் நிகழ்கின்றன.

தெருக்கள் சவூதி கொடியால் அலங்கரிக்கப்பட்டு, மேலும் மக்கள் தங்கள் தேசிய நிறங்கள் பெருமையுடன் பிரதிபலிக்கும் வகையிலான அலங்காரங்களை மேற்கொள்கின்றனர். சவூதி மக்கள் தங்கள் தேசத்தின் கடந்த காலத்தைப் பற்றி சிந்தித்து, அதன் நிகழ்காலத்தைக் கொண்டாடி, பிரகாசமான எதிர்காலத்தைக் கற்பனை செய்வதால் இந்நாள் மகிழ்ச்சி நிறைந்ததாகவும், இப்பாரிய வளர்ச்சிக்காக அந்நாட்டுத் தலைமைக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது.

தேசிய தின கொண்டாட்டங்களில் சவூதியின் கலாச்சார பாரம்பரியம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த இராச்சியம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரை நீள்கின்ற ஒரு வளமான கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

இந்நாடு இஸ்லாத்தின் பிறப்பிடமாகவும் மற்றும் இஸ்லாத்தின் இரண்டு புனித நகரங்களான மக்கா மற்றும் மதீனாவின் தாயகமுமாகும். கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுகின்றன.

பாரம்பரிய வாள் நடனமான அர்த்தா போன்ற நடனங்கள் மேலும் நாட்டுப்புற இசை நிகழ்ச்சிகள் நாடுபூராகவும் நிகழ்த்தப்படுகின்றன. கண்காட்சிகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளில் இராச்சியத்தின் வரலாற்றுக் கலைப்பொருட்கள், பாரம்பரிய கைவினைப்பொருட்கள் மற்றும் உள்ளூர் உணவு வகைகள் சிறப்பாக காட்சிப் படுத்தப்படுகின்றன.

சவூதி அரேபியாவின் ஆயுதப் படைகள் தேசிய தினத்தில் பல்வேறு கண்காட்சி நடவடிக்கைகளை வருடாந்தம் ஏற்பாடு செய்கின்றன.

இவ்வருடமும் நாடு முழுவதும் பல பிராந்தியங்களில் வான்வழி மற்றும் கடல்வழி கண்காட்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இராச்சியத்தின் ரோயல் கடற்படையும் கடற்படை அணிவகுப்புகள் மற்றும் நிகழ்ச்சிகளுடன் இந் நிகழ்வுகளில் பங்கேற்கிறது.

தேசிய தினத்தை முன்னிட்டு பல முக்கிய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றுள் மிக முக்கியமானதாக அல் உலா பிரதேசத்தில் அரங்கேற இருக்கின்ற யுணுஜஆருவுஉ என்ற இசை நிகழ்ச்சி காணப்படுகிறது. மாலை முதல் விடியற்காலை வரை நடைபெறவிருக்கும் இந்த இசை விழா, உள்ளூர் மற்றும் பிராந்திய கலைஞர்கள் பலர் பங்கேற்க இருக்கின்றனர்.

தேசிய தினத்தை முன்னிட்டு, சவூதி அரேபியாவின் பொது பொழுதுபோக்கு ஆணையம்"முரச ஹுயவந 2030", "யுடிழளந வாந ஊடழரனள", "லுநள", யனெ "ஆல உழஅந ளை ாநசந" என்ற நான்கு சிறப்பு தீம் பாடல்களை வெளியிட்டுள்ளது. கடந்த சில தசாப்தங்களாக, உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சவூதி குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது.

இந்தக் கொண்டாட்டங்கள் இந்த சாதனைகளை வெளிப்படுத்தவும், எதிர்காலத்திற்கான தேசத்தின் தூர நோக்கத்தை முன்னிலைப்படுத்தவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

மேலும், சவுதி அரேபியாவின் தேசிய தினம் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற சவூதி அரேபியாவின் புலம்பெயர் மக்களாலும் ஏனையவர்களாலும் கொண்டாடப்படுகிறது.

இது மக்களிடையே பெருமையையும் ஒற்றுமை உணர்வையும் உருவாக்குகிறது. இம்மக்கள் தேசிய தினத்தை கொண்டாடுவதற்கான நிகழ்வுகள் மற்றும் ஏற்பாடுகளை அந்தந்த நாடுகளில் உள்ள சவூதி தூ தரகங்கள் மற்றும் கலாச்சார நிறுவனங்கள் ஏற்பாடு செய்கின்றன.

இலங்கையிலும் கூட வழமை போல இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி அவர்களின் தலைமையின் கீழ், இலங்கையில் உள்ள சவூதி அரேபிய தூ தரகம், ஒரு தேசிய தின கொண்டாட்ட நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. செப்டம்பர் 25ஆம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான வரலாற்று நெடுகிலும் நிலவிவருகின்ற நல்லுறவை பறைசாற்றும் விதமாக, இலங்கை மக்கள் சார்பாக அனைத்து உலக வாழ் சவூதி மக்களுக்கும் தேசிய தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.








இந்த வாரம் இடம்பெற்ற இரண்டு சம்பவங்கள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியானவை. ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக்க பிரமரத்னவின்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு.அடுத்தது செல்வராஜா கஜேந்திரன் மீது நடத்தப்பட்ட தாக்குதல்.

இந்தத் தாக்குதல்களானது எம்பிக்களுக்கான பாதுகாப்பை கேள்விக்குற்படுத்தியுள்ளது.அதிலும் கஜேந்திரன் மீதான தாக்குதலானது ஒரு சிக்கலான விவகாரம்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானது முதல் அநேகமாக எல்லா ஆர்ப்பாட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் பொலிஸாரால் தடை விதிக்கப்படுகிறது.

எங்காவது ஓரிடத்தில் ஆர்ப்பாட்டம் என்றால்–ஊர்வலம் என்றால் உடனே அங்கு சென்றுவிடுகிறார்கள் பொலிஸார்.நீதிமன்றத் தடை உத்தரவோடு...

அப்படி தினமும் நடக்கின்ற ஆர்பாட்டங்களைத் தடுக்கின்ற பொலிஸாரால் ஏன் இந்த ஊர்வலத்தைத் தடுக்க

விலகியபோதிலும் அவருக்கும் மக்கள் செல்வாக்கு அவுட்தான்.

இவ்வாறு யாரெல்லாம் மக்கள் செல்வாக்கை இழந்து நிற்கிறார்களோ அவர்கள் அனைவரும் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளனர்.

அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை பொலிஸாருக்கு மாத்திரமல்ல கஜேந்திரனுக்கும்தான் சாரும்.

இன்று இலங்கை போன்ற நாட்டில் இனவாதம் இல்லை என்றால் அரசியல் இல்லை என்றாகிவிட்டது.

ஊடகங்களை பகிரங்கமாக எதிர்த்தனர்.

மக்கள் திருந்திவிட்டார்கள்.இனி இனவாத அரசியலுக்கு சிங்கள மக்கள் இடம் கொடுக்கமாட்டார்கள் என்றெல்லாம் பேசப்பட்டது.

ஆனால், மனிதன் விரைவில் எல்லாவற்றையும் மறக்கக்கூடியவன்.

போரை வெற்றி கொண்டமைக்காக மஹிந்தவை ஜனாதிபதியாக்கிய அதே சிங்கள மக்கள்தான் அதை மறந்து 2015இல் மஹிந்தவை தோற்கடித்தனர்.

அதே மக்கள்தான் 2019 இல் மீண்டும் மஹிந்தவின் பக்கம் போய் மஹிந்த



# அதுவும் இதுவும் பிழை

கோத்தாவை விரட்டுவதற்காக மக்கள் அன்று

காரணம் அது இனங்களுக்கிடையிலான பிரச்சினை என்பதால்.மீண்டும் தமிழ்–சிங்கள மக்களிடையே இனவாதத்தைத் தூண்டும் என்பதால்...

இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது?

திலீபனின் நினைவு தனத்தை நாடுபூராகவும் அனுஷ்டிப்பதற்காக கஜேந்திரன் எடுத்த நடவடிக்கையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம்.

தமிழர்களை பொறுத்தாதவரை திலீபன் ஒரு தியாகி.சிங்களவர்களை பொறுத்தவரை அவர் ஒரு துரோகி–எதிரி–புலி பயங்கரவாதி.

புலிகள் ஒழிக்கப்பட்ட–தடை செய்யப்பட இந்த நாட்டில் புலிகளின் நாமம் இனி ஒலிக்கக்கூடாது.அவர்கள் நினைவு கூறப்படக்கூடாது என்பது சிங்களவர்களின் நிலைப்பாடு.

அந்த நிலைப்பாட்டை மீறியதால்தான் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்த விடயத்தில் கஜேந்திரன் நிதானமாக–சிந்தித்து செயற்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் அதிகமானவர்களின் வாதம்.

திலீபனின் நினைவு கூறலை தேச துரோகமாக சிங்களவர்கள் பார்க்கின்ற நிலையில் சிங்களவர்களின் பகுதிக்கு நினைவு கூறச் சென்றமை அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

அவருக்கு நன்றாகவே தெரியும் இதுவொரு சிக்கலான விடயம் என்று. தெரிந்துகொண்டும் சென்றமையானது அரசியல்வாதிக்கே உரிய அதேபாணியில் பிரபல்யம் ஒன்றைத் தேடிக்கொள்வதற்காக பார்த்த வேலை என்றே தோணுகிறது.

சரி...!!!

அவர் செய்தது பிழையாகவே இருக்கட்டும்.அதற்காகவே அவர்மீது நடத்திய தாக்குதலை ஏற்க முடியாது.அந்த பிழைக்கான தண்டனை இதுவல்ல.

இந்த ஊர்வலம் பிரச்சினையை ஏற்படுத்தும்–சிங்கள மக்களை ஆத்திரமடையச் செய்யும் என்று பொலிஸாருக்கு நன்றாகவே தெரியும்.

மக்கள் தாக்குதல் நடத்தத் தயாராவது புலனாய்வுக்கும் தெரியும்.அவர்கள் இதைத் தடுத்திருக்கலாம்.

முடியாமல் போனது? ஏன் இதற்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற முடியாமல் போனது.?

ஆக, இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு பொலிஸார் இடம்கொடுத்துள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இனங்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தி வாக்குகளைச் சேகரிக்க வேண்டிய தேவை சில அரசியல்வாதிகளுக்கு இப்போது தேவைப்படுகிறது.

குறிப்பாக, கோத்தாவால் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரப் பிரச்சினை காரணமாக மொட்டு கட்சி மக்கள் செல்வாக்கை இழந்து நிற்கிறது.

இழந்த செல்வாக்கை மீண்டும் திரட்டுவதாக இருந்தால் இதுபோன்ற இனவாத செயற்பாடுகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

அப்படியென்றால் அவ்வாறான அரசியல்வாதிகளின் தேவைக்காகவா பொலிஸார் இப்படி அமைதியாக இருந்தார்கள் என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

இப்போது உதய கம்மன்பில இந்த விவகாரத்தைத் தூக்கி வைத்து ஆடுகிறார்.

தடை செய்யப்பட புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் நோக்கில் இவ்வாறான ஊர்வலத்தை நடத்தியமைக்காக கஜேந்திரன் கைது செய்யப்பட வேண்டும் என்கிறார்.சிஐடியில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார்.


இந்த விவகாரத்தைப் பயன்படுத்தி அவரது அரசியலை கட்சிதமாகச் செய்கிறார். மொட்டு கட்சியில் இருந்து அவர் அப்போது

ஒன்றுசேர்ந்தனர்.இன பாகுபாடின்றி தமிழ்–முஸ்லிம் –சிங்களம் என எல்லாம் மக்களும் கட்டிப் பிடித்துக்கொண்டு நின்றனர்.

கோத்தாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக கோத்தா தரப்பு மேற்கொண்ட இனவாத சதித்திட்டத்துக்குள் சிக்கி ஏமாந்து போனதாக சிங்கள மக்கள் கூறினர்.

அன்று கோத்தாவின் வெற்றிக்காக அவருக்குத் துணைபோன–அதற்காக இனங்களிடையே இனவாதத்தை விதைத்த

> தமிழர்களை பொறுத்தாதவரை திலீபன் ஒரு தியாகி.சிங்களவர்களை பொறுத்தவரை அவர் ஒரு துரோகி-எதிரி-புலி பயங்கரவாதி.புலிகள் ஒழிக்கப்பட்ட-தடை செய்யப்பட இந்த நாட்டில் புலிகளின் நாமம் இனி ஒலிக்கக்கூடாது. அவர்கள் நினைவு கூறப்படக்கூடாது என்பது சிங்களவர்களின் நிலைப்பாடு.



தரப்பை–கோத்தாவை ஆட்சிக்குக் கொண்டுவந்தனர்.

எல்லாவற்றுக்கும் காரணம் மறதிதான்.

இந்த மறதியை சிங்கள அரசியல்வாதிகள் நன்றாகவே பயன்படுத்துகிறார்கள்.தொடர்ந்தும் இனவாதம்தான் அரசியலை–ஆட்சியை தீர்மானிக்கும் என்று நம்புகிறார்கள்.

அதற்கு ஏற்ப அவர்கள் இப்போது காய் நகர்த்தி வருவதைக் காணலாம்.குறுந்தூர் மலை விவகாரம் முதல் திலீபனின் நினைவுகூறல் வரை அதுதான் நடக்கிறது.

எல்லா இன மக்களும் விழிப்பாக இருக்க வேண்டிய காலம் இது.மக்களை பலிக்கடாவாக்கி அரசியல்வாதிகள் ஆட்சி பீடம் ஏறுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**(ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்)**



# சிரித்துக்கொண்டே கழுத்தை வெட்டுவாராம்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன அக்கட்சியின் பொது செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகரவை நீக்கினார் அல்லவா.

இது நடந்து ஓரிரு நாட்களில் நாடாளுமன்ற அமர்வு.அதில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்றம் சென்ற மைத்திரிபால சபையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும்போது உள்ளே தயாசிறி ஜயசேகர,லலித் எல்லாவல மற்றும் உடுல் கலப்பதி எம்பிக்கள் பேசிக்கொண்டு நின்றனர்.

அது மைதிரி செல்லும் வழியில்.அப்போது மைத்திரி எல்லாவளவின் முதுகில் தட்டி எப்படி சுகமா என்று கேட்டார்.

அருகில் தயாசிறி நிற்பதையும் கண்டார்."" ஆ..தயா எப்படி சுகமா?"" என்று அவரிடமும் சுகம் விசாரித்தார் மைத்திரி.அத்தோடு இருவருக்கும் கதை கொழுவியது.

அருகில் அந்த இரண்டு எம்பிக்களுக்கும் அதிசயம்.இவ்வளவு நடந்திருக்கு.எதுவுமே நடக்காததுபோல் இருவரும் பேசிக்கொண்டு நிற்கிறார்களே என்று யோசிக்கத் தொடங்கினர் இருவர்.

அப்போது என்ன செய்கிறீர்கள் என்று தயாசிரியிடம் கேட்டார் மைத்திரி."" எனக்கு கட்சியில இருந்து கடிதம் வந்திருக்கு.அத படிச்சுக்கிட்டு இருக்கேன் "" என்றார் தயாசிறி நக்கலாக.

அதவாது, மைத்திரி தயாசிரிக்கு அனுப்பிய பதவி விலக்கல் கடிதத்தைத்தான் இப்படி சொன்னார்.

அப்போது குறுக்கிட்ட உடுல் களபதி சொன்னார். "நாங்க நினச்சம் நடந்த பிரச்சினைக்கு நீங்க ரெண்டு பேரும் மறந்து போய் பேசமாட்டீங்க எண்டு.இப்ப பாத்தா இப்படி சிரித்து சிரித்து பேசுறீங்களே.." என்றார்.

அதற்கு தயாசிறி கொடுத்தாரோ ஒரு பதில். "எங்கட சேர் அப்டித்தான்.சிரிச்சி சிரிச்சித்தான் கழுத்தை வெட்டுவார்" என்றார் சிரித்துக்கொண்டே..

அப்போது "உண்மையிலேயே இப்படி ஒரு வேலை செஞ்சதுக்கு உங்களுக்கு கவலை இல்லையா சேர் " என்று மைத்திரியை பார்த்துக் கேட்டார் எல்லாவல.

"கவலதான் .என்ன செய்ய.செய்ய வேண்டியத அந்த நேரமே செய்யணுமே" என்று பதில் வழங்கினார் மைத்திரி.

"தயாசிரிக்கு செஞ்ச அதே வேலையதான் சேர் ஹெலிகொப்டருக்கும் செஞ்ச." என்று அப்போது உப்புல் கூறினார்.

அதற்கு எந்த பதிலும் வழங்காத மைத்திரி சத்தமிட்டு சிரித்தவாறு உப்புலின் முதுகில் ஒரு தட்டு தட்டிவிட்டு அங்கிருந்து அகன்று அவரது ஆசனத்துக்குச் சென்றுவிட்டார்.

"என்னதான் இருந்தாலும் மஹிந்த சேர் இப்படியான கேவலமான வேல செய்யம்மாட்டார்" லலித் எல்லாவல.



துப்பறிவாளன்

# சஜித்துக்கு ராஜயோகமாம்



மஹிந்தவினதும் அவரது குடும்பத்தினரதும் ஆஸ்தான ஜோதிடர்தான் சுமணதாஸ.அவர் அடுத்த ஜனாதிபதி யார் என்று இப்போது எதிர்வு கூறியுள்ளார்.

அது சஜித்துக்கு சாதகமான எதிர்வு கூறலாகும்.

ஆம், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவது சஜித்தான். அவருக்கு அவரது ஜாதகத்தில் ராஜயோகம் உள்ளது என்று

# சாவியைப் பறித்த துமிந்த



சுதந்திர கட்சியின் இந்தக் குழப்பத்துக்கு மத்தியில் இன்னொரு சம்பவமும் இடம்பெற்றது.

அரசுடன் இணைந்துள்ள சு.கவின் துமிந்த திஸாநாயக்க குழுவுக்கும் சு.க தலைவர் மைத்திரிபாலவுக்கும் இடையில் கட்சியின் தலைமையகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

தலைமையக அலுவலகத்துக்கு பின்னால் இன்னொரு கட்டடம் உள்ளது.சு.கவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அலுவலகம் அந்தக் கட்டடத்தில்தான் உள்ளது.

திலங்க சுமதிபாலதான் அந்த அலுவலகத்தை நிர்வகிக்கிறார்.அந்தக் கட்டடத்தின் சாவி அதன் பொறுப்பாளரிடம் உள்ளது.அதை அவர் வேறு யாருக்கும் கொடுப்பதில்லை.

கூட்டத்துக்கு சென்ற துமிந்த திஸாநாயக்க அந்த சாவியை அந்தப் பொறுப்பாளரிடம் கேட்டார்.அவர் கொடுக்க மறுத்துவிட்டார்.

இருந்தும்,துமிந்த விடவில்லை.கடைசியில் வேறு வழியில்லாமல் அவர் சாவியை ஒப்படைத்தார். சாவியைப் பெற்றுக்கொண்ட துமிந்த அதை அப்படியே மைத்திரியிடம் கொடுத்துவிட்டார்.

சாவியை கால்ச்சட்டை பக்கட்டுக்குள் போட்டுக்கொண்டு சென்றுவிட்டார் மைத்திரி.

தயாசிரிக்கு மீண்டும் செயலாளர் பதவியை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பவர் திலங்க சுமதிபால.

அவரைப் பழிவாங்குவதற்காகவே மைத்திரி இவ்வாறு செய்துள்ளார் என்கிறது சு.க வட்டாரம்.



# மொரகொடவிற்கு பிரியாவிடை

இலங்கைக்கான இந்திய தூதுவர் மிலிந்த மொரகொட இந்த மாதம் இறுதியில் தூதுவர் பதவியில் இருந்து விடை பெறுகிறார்.

அவருக்கான பிரியாவிடையை அமோகமாக நடத்தி இருக்கின்றன இரண்டு நிறுவனங்கள்.

ஒன்று அதானி நிறுவனம். அடுத்தது ஹிந்துஜா நிறுவனம்.

அதானி அவரது வீட்டில் இரவு விருந்தை வழங்கினார். ஹிந்துஜா நிறுவனம் பகல் விருந்தை வழங்கியது.

இந்த இரண்டு நிறுவனங்களும் இலங்கையில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்துள்ளன.

அதற்கான ஏற்பாடுகளை செய்தமைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில்தான் இந்த பிரியாவிடை நிகழ்வை அவர்கள் நடத்தினார்களாம்.



# நெகிழ வைத்த சாகல

சாகல ரத்நாயக்க நல்லூர் திருவிழாவுக்குச் சென்றிருந்தார். அன்றைய தினம் மாலை 6.30 இற்கு விசேட பூஜை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், சாகலாவோ பிற்பகல் 3.30 மணிக்கே கோவிலுக்குச் சென்றுவிட்டார். பூஜை நேரம் நெருங்கும்வரை அதவாது, 6.30 மணி வரை மிகவும் பொறுமையுடன் கோவில் மண்டப படியில் அமர்ந்து காத்திருந்தார்.

இதைப் பார்த்த பக்தர்கள் நெகிழ்ந்து போனார்கள்.

அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி முதல் வரிசையில் நின்று பூஜையை முடித்துவிட்டுச் செல்லவில்லை. மக்களோடு மக்களாக வரிசையில் நின்று பூஜையை முடித்துவிட்டுச் சென்றார்.



# மயிரிழையில் தப்பினார்



கெஹலியவுக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டு அரசு வெற்றிபெற்றபோதிலும் அதில் ஜனாதிபதிக்குத் திருப்தி இல்லையாம்.

வாக்கெடுப்பு முடிந்ததும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பி காவிந்த ஜயவர்தன ஜனாதிபதியைச் சந்தித்தார்.

"மயிரிழையில் தப்பிட்டம்" என்று காவிந்தவிடம் கூறினார் ஜனாதிபதி.

அதற்கு "இருந்தும், இன்னும் நிறைய இருக்கு வெளிப்படுத்த" என்றார் காவிந்த. இதன்பின்தான் கெஹலியவின் சுகாதார அமைச்சைப் பறிப்பதற்கு ஜனாதிபதி திட்டம் தீட்டினாராம்.

# குரங்குகளுக்கு ஆண்மை நீக்கம்



குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.விவசாயிகளின் பெறுமதிமிக்க விளைச்சலை அழித்து வருகின்றன.


இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்கவுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் அண்மையில் மாத்தளையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அப்போது விவசாயிகளால் இந்தப் பிரச்சினை பேசப்பட்டது.

அப்போது அமைச்சர் குரங்குகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யும் யோசனை ஒன்று தம்மிடம் இருப்பதாகக் கூறினார். வன இலாகா திணைக்களத்துடனும்,கால் நடைகள் திணைக் களத்துடனும் பேசி இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படும் என்று அவர் அங்கு கூறினார்.

தொடர் - 06





1

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
P.O. Box 543, No. 180, T. B. Jayah Mawatha, Colombo 10.
E-mail : director@muslimaffairs.gov.lk
Web : www.muslimaffairs.gov.lk

My No: MRCA/R/09/RTI/2023 Your No: Date: 2023.06.16

எம்.எல்.எஸ். முஹம்மத்
இல. 14, வைத்தியசாலை வீதி
மாவனல்லை.

<u>2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் தொடர்பானது</u>

அஹதிய்யாப் பாடசாலைகள் தொடர்பில் தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2023.05.30 ஆம் திகதிய கடிதம் தொடர்பானது.

1. இலங்கையில் இயங்கும் அஹதிய்யா பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை சம்பந்தமான தகவல்கள் எம்மிடம் இல்லை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யா பாடசாலைகளின் எண்ணிக்கை 603 ஆகும்
2. அஹதிய்யா பாடசாலைகளின் மேம்பாட்டிற்கு கலாச்சார அமைச்சின் ஊடாக எந்த நிதியும் கிடைக்கவில்லை
3. திருப்பி அனுப்பப்படவில்லை
4. அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 59208
5. அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களாக ஆலிம்கள் 525
அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களாக உயர் தரம் சித்தியடைந்தவர்கள் 2665
அஹதிய்யா பாடசாலை ஆண் ஆசிரியர்கள் 1498
அஹதிய்யா பாடசாலை பெண் ஆசிரியர்கள் 2781
6. கடந்த ஐந்து வருடங்களாக அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 104,535,000.00
சீருடைகளுக்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 37,264,571.00
7. ஒரு முறைப்பாடு
8. ஆசிரியர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் ஊடாக உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது நிதி ஊழல்களில் ஈடுபட்ட அதிபரிடம் விசாரணை செய்து குறித்த பணம் மீளப்பெற்று குறித்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது
9. அது பற்றிய தகவல் எமது திணைக்களத்திற்கு கிடைக்கவில்லை
10.



# அஹதிய்யா அறநெறிப் பாடசாலைகளும் சட்டவிரோத கட்டணங்களும்

- எம்.எல்.எஸ்.முஹம்மத் -
lk.mlsmohamed@gmail.com

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 7 முஸ்லிம் பாடசாலைகளையும் மையப்படுத்தி ஏழு அஹதிய்யாக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

சில அஹதிய்யாக்களின் அதிபர்களாக அப்பாடசாலையின் அதிபர்கள் கடமையாற்றி வருவதுடன் மற்றும் சில அஹதியாக்களின் அதிபர்களாக ஆசிரியர்கள் மற்றும் ஆலிம்கள் சிலரும் கடமையாற்றுகின்றனர்.

அஹதியாக்களின் செலவினங்களுக்கென அரசினால் மாதாந்தம் நிதியுதவிகள் எதுவும் வழங்கப்படாத போதிலும் பல முஸ்லிம் பள்ளிவாசல் நிர்வாகங்கள் மாதந்தம் இரண்டாயிரம் ரூபா முதல் ஐயாயிரம் ரூபா வரையில் நன்கொடைகளை வழங்கி வருவதாக இரத்தினபுரி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அல்ஹாஜ்.பாரூக் தெரிவிக்கிறார்.

இதுதவிர ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள முஸ்லிம் தனவந்தர்கள் பலரும் அஹதிய்யா மேம்பாட்டிற்கென பெருந்தொகையான பணத்தை அஹதிய்யா பாடசாலைகளின் அபிவிருத்திக்கென செலவு செய்து வருகிறது என அவர் மேலும் தெரிவிக்கிறார்.

இதேகருத்தை உறுதிப்படுத்தும் விதமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மேலும் இரு முக்கியஸ்தர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளத்தின் முன்னாள் தலைவர் அல்ஹாஜ்.இல்ஹாம் யஹ்யா கருத்து தெரிவிக்கையில் " அஹதிய்யா பாடசாலைகளில் பல்வேறு வகையான நிதி மோசடிகள் இடம்பெறுவதாக நான் உணர்கிறேன்.

குறிப்பாக அஹதிய்யா பாடசாலைகளின் அதிபர்கள் எந்தவொரு நிதி அறிக்கையையும் எங்களிடம் சமர்ப்பிப்பதில்லை.

விழாக்கள் இடம்பெறும் போது மாத்திரம் எமது உதவியை நாடி வருகின்றனர்.கணக்காய்வு நடவடிக்கைகள் எதுவும் இல்லாததால் நன்கொடையாகக் கிடைக்கபெறும் பணம் மற்றும் மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பில் எவரும் உரிய முறையில் பொறுப்புக்கூற மறுக்கின்றனர்.

நிதி தொடர்பில் எந்தவொரு வெளிப்படைத் தன்மைளும் இல்லாததால் நான் இச்சமேளனத்திலிருந்து வெளியேறினேன்", அவர் தெரிவிக்கிறார்.

அல்ஹாஜ். இல்ஹாமின் அஹதிய்யாக்கள் அனுப்புவதில்லை.

அஹதிய்யா மத்திய சம்மேளனமும் முஸ்லிம் கலாச்சார திணைக்களமும் கூட்டாக இந்த விடயத்தில் அக்கறை செலுத்துவதன் மூலம் அஹதிய்யா பிரச்சினைகளை கட்டுப்படுத்த முடியும் ",என அவர் தெரிவிக்கிறார்.

அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் உப தலைவர் பாரூக் பதீனிடம் அஹதிய்யா தொடர்பாகக் கதைத்த

கஹவத்தை அஹதிய்யா பாடசாலை அபிவிருத்திக் குழு தன்னிடமுள்ள பணத்தில் கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அரச பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலனுக்கென மாதாந்தம் இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட தொகையை செலவு செய்து வருகிறது என அக்குழுவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கிறார்.

அஹதிய்யா பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரமின்றி பல இடங்களில் பள்ளிவாசல் நிர்வாகங்களிடமிருந்தும் முஸ்லிம் தனவந்தர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது.

எனினும் இப்பணம் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட எந்த ஆவனங்களும் இல்லாததால் இங்கு இடம்பெறும் நிதி மோசடிகளை கண்டுபிடிக்க முடியாதுள்ளதாக அல்லாஜ்.எம்.ஸனீர் இராஜினாமாவைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட இரத்தினபுரி மாவட்ட புதிய அஹதிய்யா சம்மேளனத்தின் செயலாளர் திருமதி மலீஹா உம்மாவை தொடர்புகொண்டு கேட்ட போது

" இரத்தினபுரி மாவட்டத்தில் அஹதிய்யா பாடசாலைகளுக்கான மாணவர் வரவுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

5 சதவீதத்திற்கும் குறைவான மாணவார்களே தொடர்ந்தும் வருகின்றனர்.ஞாயிறு தினங்களில் இடம்பெறும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் மற்றும் ஏனைய இடைநிலை தனியார் வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்வதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அஹதிய்யா நிர்வாகங்களும் பொறுப்புடன் செயற்படத் தவறுகின்றனர்.குறிப்பாக நிதி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் குறித்த எந்தவொரு அறிக்கையும் எங்களுக்கு

போது" அஹதிய்யா கல்வி முறை பற்றி முஸ்லிம் சமூகத்தில் இன்னும் திருப்திகரமான நிலைப்பாடுகள் இல்லை.பாடசாலைகளில் வழங்கப்படும் இஸ்லாமியக் கல்விக்கு மேலதிகமாக வழங்கப்படும் கல்வி என்றே இதனை பலரும் நினைக்கின்றனர்.

அத்துடன் தரமான ஆசிரியர்கள் இன்றி வெறும் அடிப்படை அறிவுகள் மிக்கஆசிரியர்களாலேயே அஹதிய்யாக்களில் மாணவர்களுக்கு இஸ்லாமிய மார்க்கம் கற்பிக்கப்படுகிறது என குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பல அஹதிய்யாக்களில் அதிபர்கள் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதால் அஹதிய்யாக்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்து வருகிறது.

ஊழல் பற்றிய முறைப்பாடுகளும் அதிகரித்துள்ளது.எமது சம்மேளனத்தின் முன்னைய நிர்வாங்களிலும் பல நிதி மோசடிகள் நிகழ்ந்துள்ளன.

இதனால் அஹதிய்யாவின் பெறுமதியான பல சொத்துக்கள் இழக்கப்பட்டுள்ளன.எதிர்காலத்தில் இவை அனைத்தையும் கட்டுப்படுத்தி அஹதிய்யாவை பிரதேச ரீதியாக மேம்படுத்துவதற்கு அதிகாரம் மிக்க அஹதிய்யா நிர்வாகப் பொறிமுறைகள் அமைக்கப்பட வேண்டும்", என அவர் வேண்டுகோள் விடுக்கிறார்.

அஹதிய்யா பாடசாலைகளை இலக்காக் கொண்டு இடம்பெற்று வரும் நிதி மோசடிகளையும் மாணவர்களிடமிருந்து சட்டவிரோதமான முறையில் பணம் அறவிடப்படும் செயன்முறையையும் கட்டுப்படுத்த முடியுமா என சட்டத்தரணி எம்.எம். சுல்பிகாரை தொடர்பு கொண்டு கேட்ட போது,

" அஹதிய்யா பாடசாலைகளின் அபிவிருத்திக்கென அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் மோசடிகள் இடம் பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அத்துடன் குறித்த அஹதிய்யா நிறுவனமும் அந்த நிதி அறிக்கை முழுமையாக வெளிப்படுத்துவதற்கும் கடமைப்பட்டுள்ளது.

எனினும் மாணவர்களிடம் பணம் அறவிடும் செயன் முறை சட்ட விரோதமான என அஹதிய்யா பாடசாலைகளுக்கான யாப்பு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

எனினும் இலங்கையில் அஹதிய்யா பாடசாலைகள் பொறிமுறை செயல் இழந்துள்ளது என்பது அஹதிய்யா தர்மச்சாறிய பரீட்சை பெறுபேறுகள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே அவசரமாக தேசிய ரீதியில் அஹதிய்யா பாடசாலைகளை மீளவும் கட்டியெழுப்புவதற்கான புதிய நிர்வாகப் பொறிமுறையை உருவாக்கி அதன் ஊடாக அஹதிய்யா தொடர்பான நிதிப் பிரமாணங்களை பாதுகாக்க முடியும்",என ஆலோசனை தெரிவிக்கிறார்.

-முற்றும்-



# சாதிக்கத் துடிக்கும் நடனப் புயல்



அனு மதுபாஷினி சர்வதேச மட்டத்தில் நடனத்தில் சாதிக்கத் துடிக்கின்ற ஒரு பெண். சிறு வயது முதலே ஆக்கபூர்வமான விடயத்தில் ஆர்வமுள்ளவர்.

கலைஞர், எழுத்தாளர், நடன ஆசிரியர் என கலைத்துறையில் பல முகங்களை கொண்டவர். கலைத்துறையில் சர்வதேச மட்டத்தில் சாதிக்க வேண்டும் என்பதே அனுவின் சிறு வயதுக் கனவு.

அந்தக் கனவை அடையும் வகையில் வேகமாக நடைபோடுகிறார்.அதற்கு ஏற்ப அவர் வேகமாக இந்திய கலைத் தளத்தில் கால் பதித்து வருகிறார்.

அவரது நடனத்தை ரசிப்பதற்கு பெரும் ரசிகர் பட்டாளமே உருவாகி வருகிறது. அவரது நடன வீடியோக்களை அதிகமானவர்கள் விரும்பிப் பார்க்கிறார்கள்.

இது தொடர்பில் அவர் எமது புது சுடர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியை கீழே தருகிறோம்.

**கேள்வி: நடனத் துறைக்குள் நுழைவதற்குக் காரணம் என்ன? எவ்வளவு காலமாக இதில் ஈடுபட்டு வருகிறீர்கள்?**

பதில்: நான் குழந்தையாக இருக்கும்போது–எழும்பி நடக்கும் முன்பே நடனமாடினேன் என்று எனது தாய் என்னிடம் சொன்னார்.

அந்த வயதில் இருந்தே எனது திறமையை வளர்த்துக்கொண்டேன் என்று நான் நம்புகிறேன்.பாடசாலை நடன நிகழ்ச்சிகள் பலவற்றில் நான் பங்குபற்றி இருக்கிறேன்.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எனது திறமையை வெளிக்காட்ட நான் தவறியதில்லை. பரத நாட்டியம்,கண்டியன் நடனத்திலும் எனது திறமையை வெளிக்காட்டி வருகிறேன்.

**கேள்வி: எப்படிப்பட்ட நடன வகைகளை தெரிவு செய்துள்ளீர்கள்?**

பதில்: பரத மற்றும் கதகளி நடனங்களில் நான் பயிற்சி பெற்றுள்ளேன்.கண்டி மற்றும் இலங்கை கிராமிய நடனங்களையும் ஆடி வருகிறேன்.ாளி ாழி பயின்று வருகிறேன்.நடன ஆசிரியையாகவும் இருக்கிறேன்.

**கேள்வி: நீங்கள் ஒரு தொழில்சார் நடன ஆசிரியையா?**

பதில்: ஆம், நான் ஒன்லைன் நடன வகுப்புகளும் நடத்துகிறேன்.மாதாந்தம் பயிற்சி பட்டறைகளை நடத்துகிறேன்.



**கேள்வி: உங்களுக்கு நடனத்தைப்போல் இசையிலும் ஆர்வமுண்டா?**

பதில்: ஆம்.அதில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு.என்னால் பாடவும் முடியும்.எனது சகோதரன் குஸ ான் சமுபதியுடன் இணைந்து பல பாடல்களைப் பாடியுள்ளேன்.

**கேள்வி: திரைப்படங்களில் நடிக்கும் திட்டம் ஏதும் உண்டா?**

பதில்: ஒரு பயிற்சி பெற்ற நடிகை என்ற வகையில் எனக்கு நடிப்பின்மீது ஆர்வம் அதிகம்.பல நேர்முகப் பரீட்சைகளுக்கு சென்றிருக்கிறேன். அவர்களின் அழைப்புக்காகக் காத்திருக்கிறேன்.

இசை வீடியோக்களை இயக்கி இருக்கிறேன்.குறுந்திரைப்படங்களை இயக்கவுள்ளேன்.


**கேள்வி: நடனத்துக்கு அப்பால் வேறு என்ன செய்கிறீர்கள்?**

பதில்: நான் ஓர் இசை அமைப்பாளர். பாடல்கள் எழுதி, மெட்டமைத்தது பாடுகிறேன். இந்தத் துறையில் உள்ளூர் கலைஞர்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன்.

நான் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்துள்ளேன்.

**கேள்வி: உங்களது எழுத்தாற்றலை பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்**

பதில்: நான் ஓர் ஆக்கபூர்வமான எழுத்தாளர்.எனது படைப்புகள் சமூக ஊடகத்தில் உள்ளது. எனக்கு கவிதைகளிலும் ஆர்வம் அதிகம்.விரைவில் கவிதைகள் வெளியிடவுள்ளேன்.



**கேள்வி: உங்களது எதிர்காலத் திட்டம் என்ன?**

பதில்: தெற்காசியாவில் உள்ள மிகப்பெரிய நடிகர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். எனது திறமைகளை–நடனத்தை வெளிக்காட்டும் வகையிலான திரைப்படங்களில் நடிக்க வேண்டும்.

திரைப்படம் ஒன்றைத் தயாரித்து இயக்க முடியும் என்று நம்புகிறேன். – என்றார்.

***

# சந்தோஷ் நாராயணன் யாழில்!



இலங்கையின் சகல பாகங்களையும் சேர்ந்த தமிழ் இசை ரசிகர்களுக்கு, செப்டெம்பர் 30 ஆம் திகதி, யாழ். நகரில் மாபெரும் இசை நிகழ்ச்சியை கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தென்னிந்திய இசை நட்சத்திரக் கலைஞரான சந்தோஷ் நாராயணன், செப்டெம்பர் 30 ஆம் திகதி பி.ப. 6.00 மணி முதல், யாழ்ப்பாணம் கோட்டை பகுதியை அண்மித்த, முற்றவெளி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ள இசை நிகழ்ச்சியில் பங்கேற்று, ரசிகர்களை இசைப் பரவசத்தில் ஆழ்த்தவுள்ளார்.

இந்த மாபெரும் இசை நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் வாய்ப்பு அனைவருக்கும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கின்றமை தொடர்பில் சந்தோஷ் நாராயணன் கருத்துத் தெரிவிக்கையில், “சர்வதேச மொழியான இசையினூடாக, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கலாசார உறவுகளை கொண்டாடும் வகையில் இந்த இசை நிகழ்ச்சி அமைந்திருக்கும்.

இலங்கை மற்றும் இந்திய கலைஞர்களை ஒன்றிணைத்து, மனம்மறவாத இனிமையான மாலைப் பொழுதை இலங்கையின் ரசிகர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது எமது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.” என்றார்.



# சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் ஹமீடியா

இலங்கையின் முன்னணி ஆண்களுக்கான ஆடை வர்த்தக நாமமான ஹமீடியா, இலங்கையின் சுற்றுலா பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, வெள்ளவத்தை கடற்கரையில் “வெல்ல பீச் மேம்படுத்தல்” (Wella Beach Upgrade) என்ற தலைப்பில் கடற்கரையை சுத்தப்படுத்தும் திட்டத்தின் ஒரு கட்டமான ”இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பவோம்” (Re-Build Sri Lanka) எனும் இந்த முயற்சியானது ஹமீடியாவின் CSR பிரிவான Lifeworth மற்றும் பங்காளி நிறுவனங்களான Sri Lanka Life Saving மற்றும் Rainbow Swimming என்பனவற்றால் இணைந்து முன்னெடுக்கப்பட்டன.

வெள்ளவத்தை கடற்கரை அதன் அழகிய, நீல வர்ண நீர் மற்றும் தங்கநிறமான மணலைக் கொண்ட இலங்கையின் மிகவும் பிரபலமான கடற்கரைகளில் ஒன்றாகும்.

குடும்பங்கள், கடற்ரையில் தங்கள் பொழுதைக் களிக்க விரும்பவோர், சாகசப் பயணிகள், உடற்பயிற்சி ஆர்வலர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட பலரும் இங்கு வருகின்றனர்.

கடற்கரை உணவகங்கள், உடை மாற்றும் அறைகள், குளியலறைகள் போன்ற பல பயனுள்ள வசதிகளை இது வழங்குகிறது, இது கடற்கரைக்கு வருவோரை தெள்ளத்தெளிவான கடல்நீரில் நீந்தவும் கடற்கரை மணலில் விளையாடி மகிழவும் வாய்ப்பளிக்கின்றது.

சுற்றுச்சூழலுக்கு அர்ப்பணிப்புள்ள ஒரு பொறுப்பான அமைப்பாக ஹமீடியாவின் கடற்கரை சுத்தப்படுத்தும் முயற்சி அதன் ஊழியர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மனப்பான்மையை வளர்க்கிறது.

# Vantage அனுசரணை




Vantage ஆண்கள் ஆடையகம் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் Sri Lanka Model United Nations (SLMUN) நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியது. 19 மற்றும் 20 ஆகிய திகதிளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நவ நாகரிக ஆடைகளை விரும்பும் இன்றைய தலைமுறைக்கு ஏயவெயபந ஆடைகள் சிறந்த தெரிவாகும். shirts, trousers and innerwear உள்ளிட்ட ஆண்களுக்குத் தேவையான அணைத்து விதமான தெரிவுகளையும் இது வைத்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் மேலும் நவீனமயமான ஆட்டைத் தொகுதிகளை அறிமுகப்படுத்துவதற்கு ஏயவெயபந திட்டமிட்டுள்ளது.

இளைஞர்களின் தலைமைத்துவ அபிவிருத்திக்கு உதவும் இவ்வாறான நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்குவதில் தாம் பெருமையடைகிறோம் என்றார் Vantage ஆடைகளின் தாய் நிறுவனமான Ebony Holdings நிறுவனத்தின் தலைவர் ரஷ்மி ரஹீம்.

Vantage ஆட்டைத் தெரிவுகள் இப்போது நாடு பூராகவும் கிடைக்கின்றன.இதனால் நவநாகரீக ஆடைகளில் நாட்டம் கொண்டுள்ள அணைத்து இளைஞர்களுக்கும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

# மக்கள் வங்கியின் இலாபம் அதிகரிப்பு





2023 ஜுன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான பெறுபேறுகளை மக்கள் வங்கி இன்று அறிவித்துள்ளதுடன், மொத்த திரட்டிய தொழிற்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கு முன் இலாபம் ஆகியவற்றை முறையே ரூபா 48.2 பில்லியன் மற்றும் ரூபா 9.4 பில்லியன் ரூபா ஆக அறிவித்துள்ளது (2022 முதல் அரையாண்டு: ரூபா 80.7 பில்லியன் மற்றும் ரூபா 15.2 பில்லியன்).

2022 ஆம் ஆண்டின் பெரும்பகுதியில் நிலவிய உயர்ந்த வட்டி வீதச் சூழலில் இருந்து எழுந்த அதிக வட்டிச் செலவுகள் காரணமாக, தவணை வைப்பு நிதிக்கான செலவுகள் அதிகரிக்க வழிவகுத்ததுடன், திரட்டிய தேறிய வட்டி வருமானம் 2022 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 ஜுன் 30 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் ரூபா 31.4 பில்லியன் தொகையாக சரிவடைந்தது.

திரட்டிய தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் ரூபா 7.9 பில்லியனாக இருந்தது, இது 2022 இன் முதல் அரையாண்டின் போது ஒரு முறை மட்டுமான விடயங்கள் நீங்கலாக, இதே ஒப்பீட்டு அடிப்படையில் 6.0% வளர்ச்சியைக் குறிக்கிறது.

பணவீக்கத்தை பிரதிபலிக்கும் வகையிலான செலவு அழுத்தங்கள், பெரும்பாலாக 2022 இன் பிற்பகுதியில் எழுந்த நிலையில், திரட்டிய மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள் 12.98% ஆல் அதிகரித்து ரூபா 30.2 பில்லியனை எட்டியது (2022 முதல் அரையாண்டு: ரூபா 26.7 பில்லியன்).

# செலான் கார்ட்ஸ் Vision Care உடன் இணைவு

SEYLAN BANK PLC — The bank with a heart
VISION CARE OPTICAL SERVICES

வாழ்க்கையின் முக்கியமான தேவைகளுக்கு அத்தியாவசியமான செலான் கார்ட்ஸ் அண்மையில் இலங்கையின் முன்னணி மூக்குக் கண்ணாடி விற்பனையகமான Vision Care உடன் பங்கான்மை ஒன்றை ஏற்படுத்தியது.

இப்பங்கான்மையின் ஊடாக செலான் கிரடிட் கார்ட் மற்றும் செலான் ஹரசர சிரேஷ்ட பிரஜைகள் டெபிட் கார்ட் உரிமையாளர்களுக்கு பிரத்தியேகமான விலைக்கழிவுகள் மற்றும் இலகு கொடுப்பனவுத் திட்டத் தெரிவுகளை வழங்க செலான் கார்ட்ஸ் எதிர்பார்த்துள்ளது.

செலான் கிரடிட் கார்ட் உரிமையாளர்கள் இலகு கொடுப்பனவுத் திட்டங்களின் நலன்களைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு, கேட்டல் உபகரணங்கள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் குளிர் கண்ணாடிகளுக்கான கொடுப்பனவை எவ்வித வட்டியுமற்ற 12 மாதத் தவணைக் கட்டணங்களாக மாற்றும் தெரிவும் உண்டு. கொள்வனவுகளை இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களாக மாற்றுவதற்கு கார்ட் உரிமையாளர்கள் கொடுப்பனவை மேற்கொண்டு 7 நாட்களுக்குள் துரித இலக்கமான 011 - 200 8888 ஐ அழைத்தல் வேண்டும்.

இவ்வாறான மாற்றீடுகளுக்கான கொள்வனவு எல்லை குறைந்தபட்சம் ரூ.10,000 மற்றும் அதிகபட்சமாக ரூ. 1 மில்லியன் ஆக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, செலான் ஹரசர டெபிட் கார்ட் உரிமையாளர்கள் கட்டுப்படியான விலையில் கேட்டல் ஆற்றலைப் பெற்றுக்கொள்ள கேட்டல் உபகரணங்களுக்கு 15 வீதம் வரையான விலைக்கழிவுக்கு தகுதிபெறுவர்.

அத்துடன் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதற்காக மூக்குக் கண்ணாடிகள் மற்றும் குளிர் கண்ணாடிகளுக்கு 10% வரையான விலைக்கழிவும் கிடைக்கிறது. இந்த சலுகைகள் சிரேஷ்ட பிரஜைகளுக்கு என கட்டமைக்கப்பட்ட தீர்வுகளை வழங்கும் சிறந்த வங்கிக் கணக்காக செலான் ஹரசரவினை நிலை நிறுத்துகிறது.

# சிரேஷ்ட பிரஜைகளுக்கு புதிய பக்கேஜ்



தேசத்துக்கு சிரேஷ்ட பிரஜைகள் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், SLT - MOBITEL, புத்தாக்கமான புதிய பக்கேஜை அறிமுகம் செய்துள்ளது.

இந்த விசேட பக்கேஜில், சகாயமான விலையிடல் போன்ற முக்கியமான உள்ளம்சங்கள் அடங்கியுள்ளன. ரூ. 300 (வரிகள் தவிர்த்து) எனும் மாத வாடகைக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கு தமது தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

மொபிடெல் மற்றும் ஏனைய வலையமைப்புகளுக்கு 1000 நிமிடங்கள் வெளிச் செல்லும் அழைப்புகளை இந்த பக்கேஜ் வழங்குவதுடன், அதனூடாக சிரேஷ்ட பிரஜைகளுக்கு தமது குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடன் எந்நேரத்திலும் தொடர்பில் இருக்க முடியும்.

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பரீட்சியமான சிரேஷ்ட பிரஜைகளுக்கு எந்த வலையமைப்புக்கும் 1000 இலவச ளுஆளு களை அனுப்பும் சுதந்திரம் இந்தப் பக்கேஜினூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகள் ஒன்லைனில் தொடர்பில் இருப்பதன் முக்கியத்துவத்தை SLT-MOBITEL உணர்ந்துள்ளது. பக்கேஜில் 2புடீ எனிடைம் டேட்டா பாவனை வழங்கப்பட்டுள்ளதுடன், சிரேஷ்ட பிரஜைகளுக்கு டிஜிட்டல் உள்ளம்சங்களுடன் தொடர்பில் இருக்கும் வசதியை வழங்கியுள்ளது.

தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியில், புதிய பக்கேஜ் செலவு சிக்கனமான தீர்வாக அமைந்துள்ளது. எந்தவொரு வலையமைப்பு குரல் அழைப்புகளுக்கும் சிக்கனமான வகையில் ரூ. 1.50/- கட்டணம் மட்டும் அறவிடும் வகையில் அமைந்துள்ளது. மேலும், எந்த வலையமைப்புக்கும் SMS அல்லது MMS அனுப்புவதற்கு 20 சதம் மாத்திரமே அறவிடப்படும்.



# ரியல் எஸ்டேட் துறையில் புது யுகம் படைக்கும் JOHN KEELLS

இலங்கையிலுள்ள மாபெரும் ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான, ஜோன் கீல்ஸ் புறொப்பர்டீஸ் (JKP), தொழிற்துறையில் புத்தாக்கமான வழிமுறைகளை பின்பற்றி, மிகச் சிறந்த வாழிடப் பகுதிகளை உருவாக்கி பெருமளவில் பேசப்படும் நாமமாகத் திகழ்கின்றது.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள மாபெரும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தனது பரந்தளவு வியாபாரப் பிரிவுகளுக்காக நன்மதிப்பைக் கட்டியெழுப்பியுள்ளது. அதன் ரியல் எஸ்டேட் பிரிவில் JKP உயர்ந்த ஸ்தானத்தில் அமைந்துள்ளது.

உயர் ரக வதிவிட தொடர்மனைகளை நிர்மாணிப்பதற்காக புகழ்பெற்றுள்ள JKP, இலங்கையின் நகர வாழ்விடக் கட்டமைப்பை மாற்றியமைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. The Emperor, The Monarch, 7th Sense, OnThree20, TRI-ZEN மற்றும் 4.5 மில்லியன் சதுர அடிப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் ஊயைெயெஅழுெ டுகைந ரிசோர்ட் ஆகியன புத்தாக்கம் மற்றும் சிறப்பு ஆகியவற்றின் அடையாளமாக அமைந்துள்ளன.

வதிவிடத் திட்டங்களுக்கு மேலதிகமாக, நிறுவனம் Crescat Boulevard Mall, மொரட்டுவ மற்றும் ஜா-எல பிரதேசங்களில் K-Zone Malls மற்றும் கண்டி, திகன பகுதியில் Victoria Golf Resort ஆகியவற்றையும் செயற்படுத்துகின்றது.

இந்த கொல்ஃப் திடல், உலகின் 100 மிகவும் அழகிய கொல்ஃப் திடல்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இதில் பிரத்தியேகமான காணிப் பகுதிகள் மற்றும் சொகுசான விடுமுறை இல்லப்பகுதிகள் போன்றனவும் அடங்கியுள்ளன.

புத்தாக்கத்துக்கான அர்ப்பணிப்பு என்பது ஏனைய நிறுவனங்களிலிருந்து JKP ஐ வேறுபடுத்தி காண்பிக்கும் அம்சமாக அமைந்துள்ளது. The Emperor மற்றும் The Monarch ஆகிய திட்டங்களினூடாக ஒன்றிணைக்கப்பட்ட வாழ்க்கைமுறை எனும் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், சொகுசான வாழிடங்களில் புதிய எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன.